இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 311 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 07 – சனிக்கிழமை 21 ஜூன் 2025 – வெளியீடு 32 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 311 : Thiruvalluvar Year - 2056 - Aani 07 - Saturday 21 June 2025 - Dak 32 Pages ₹ 5.00

## வேலூர் - திருச்சி - கள்ளக்குறிச்சி - திருவண்ணாமலை மாவட்டங்களில்

# 4 புதிய அரசு கலை - அறிவியல் கல்லூரிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.6.2025) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் 2025–26 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும் வகையில் வேலூர் மாவட்டம் – கே.வி. குப்பம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை, திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் ஆகிய இடங்களில் 4 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். மேலும், வேலூர் மாவட்டம், சேர்க்காடு, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் 36 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடம், துணை வேந்தர், உதவி பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கான குடியிருப்புகளை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, கல்லூரி கல்வி ஆணையர் திருமதி. எ.சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, ஜூன் 21-

**2025-26 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும் வகையில் 4 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கி வைத்து, வேலூர் மாவட்டம், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் ரூ.36.18 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.6.2025) தலைமைச் செயலகத்தில், உயர் கல்வித் துறை சார்பில் 2025-26 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும் வகையில் வேலூர் மாவட்டம் - கே.வி. குப்பம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - துறையூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் - உளுந்தூர்பேட்டை, திருவண்ணாமலை மாவட்டம் - செங்கம் ஆகிய இடங்களில் 4 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

மேலும், வேலூர் மாவட்டம், சேர்க்காடு, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் 36 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடம், துணை வேந்தர், உதவி பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கான குடியிருப்புகளை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களைத் தொடங்குதல், அதன் வாயிலாக பரவலாக உயர் கல்வி பயிலும் வாய்ப்புகள், ஆராய்ச்சிப் படிப்புகள், புதிய முயற்சிகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல் ஆகியவற்றில் தீவிரமான கவனம் செலுத்தப்பட்டு பல்வேறு சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்குச் சலுகைகள்!**

மேலும், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில "புதுமைப் பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயிலப் "தமிழ்ப் புதல்வன்" திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/- உதவித்தொகை வழங்குதல், முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்குச் சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு முன்னோடி திட்டங்களையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்விச் சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

ஏழை எளிய கிராமப்புற மாணவ, மாணவியரின் உயர் கல்வித் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு, 2025-26 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கையில் 11 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பின்படி, 2025-26 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும் வகையில் 11 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 26.5.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

**கூடுதல் கல்லூரிகள்!**

அதன் தொடர்ச்சியாக, வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையிலும், கிராமப்புற மாணவர்கள் பயன்பெறும் வகையிலும், இக்கல்வியாண்டில் (2025-2026), உயர்கல்வித் துறையின் சார்பில் வேலூர் மாவட்டம் -

கே.வி.குப்பம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - துறையூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் - உளுந்தூர்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் - செங்கம் ஆகிய நான்கு இடங்களில் கூடுதலாக 4 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என முதலமைச்சர் அவர்களால் 30.05.2025 அன்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் 4 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த 4 கல்லூரிகளும், தலா 5 பாடப்பிரிவுகளுடன் தொடங்கப்படும். மேலும், ஒவ்வொரு கல்லூரிக்கும் 12 ஆசிரியர்கள் (உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்கள் முதலாமாண்டிற்கு மட்டும்) மற்றும் 14 ஆசிரியரல்லாப் பணியிடங்கள் வீதம் 4 கல்லூரிகளுக்கு மொத்தம் 48 ஆசிரியர்கள் மற்றும் 56 ஆசிரியரல்லாப் பணியிடங்களைத் தோற்றுவிக்கப்பட்டு, 4 கல்லூரிகளுக்கு ஓராண்டுக்கான தொடர் மற்றும் தொடராச் செலவினத்திற்காக மொத்தம் 8 கோடியே 67 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், இப்பகுதிகளிலுள்ள சுமார் 1,120 மாண வர்கள் உயர்கல்வி பயிலும் வாய்ப்பைப் பெறுவார்கள்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்ட இப்புதிய 4 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைச் சேர்த்து தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 180 ஆக உயர்ந்துள்ளது.

**பணியாளர் குடியிருப்புகள்!**

மேலும், வேலூர் மாவட்டம், சேர்க்காடு, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் 18 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் ஐந்து தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடம், 2 கோடியே 38 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியதையடுத்து

## சென்னை மெட்ரோ ரயில் - பறக்கும் ரயில் இணைப்புத் திட்டத்தை விரைவுபடுத்த உத்தரவு!

### ரயில்வே துறைக்கு பிரதமர் அலுவலகம் அறிவுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 21-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலியுறுத்தலையடுத்து, சென்னை மெட்ரோ ரயில் மற்றும் பறக்கும் ரயில் இணைப்பு திட்டத்தை விரைவுப்படுத்த ரயில்வே துறைக்கு பிரதமர் அலுவலகம் உத்தரவிட்டுள்ளது.

சென்னையில் இரண்டாம் கட்டமாக, பல்வேறு வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த 4 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், சென்னை மெட்ரோ ரயில்களுடன், சென்னை பறக்கும் ரயில் சேவை பணிகளும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், மெட்ரோ ரயில் சேவைகளுடன், பறக்கும் ரயில் திட்டத்தை இணைக்கும் பணிகளை விரைவுப்படுத்த ரயில்வே துறைக்கு பிரதமர் அலுவலகம் உத்தரவிட்டுள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலியுறுத்தலையடுத்து, ரயில்வே துறைக்கு பிரதமர் அலுவலகம் உத்தர விட்டுள்ளது.

கடந்த மாதம் டெல்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்த இரண்டு இணைப்பு திட்டப் பணிகளை விரைந்து முடிக்குமாறு பிரதமர் மோடியிடம் வலியுறுத்தியிருந்தார். அதன்படி, சென்னை மெட்ரோ, பறக்கும் ரயில் திட்டப்பணிகளுக்கான, நிலங்களை விரைந்து கையகப் படுத்தும் நடவடிக்கை தீவிரப் படுத்த ப்பட்டுள்ளதாக, ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கான பணிகளை மாநில அரசுடன் இணைந்து விரைவுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், எளிதான மற்றும் விரைவான போக்குவரத்து வசதி போன்றவற்றால், மெட்ரோ ரயில் மற்றும் பறக்கும் ரயில் பயணங்களை அதிக அளவிலான மக்கள் பயன்படுத்துவதால், மெட்ரோ ரயில் திட்டத்துடன் பறக்கும் ரயில் திட்டப்பணிகள் விரைந்து முடிக்கப்படும் என்றும் ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

### குடியரசுத் தலைவர்

## திருமதி திரவுபதி முர்மு பிறந்தநாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன் 21-

குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவர்களின் பிறந்த நாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்து, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு அவர்களுக்கு எனது பிறந்தநாள் நல் வாழ்த்துகள்.**

**நல்ல உடல்நலத்துடனும், மன அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் நாட்டின் சேவையில் தாங்கள் ஈடுபட விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

### புலம் பெயர்ந்தவர்களை அன்பால் அரவணைப்போம்!

## போரை மாய்ப்போம்! மனிதம் காப்போம்!

### உலக ஏதிலிகள் நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்தி!

சென்னை, ஜூன் 21-

**புலம் பெயர்ந்தவர்களை அன்பால் அரவணைப்போம்! போரை மாய்ப்போம்! மனிதம் காப்போம் என்று உலக ஏதிலிகள் தினத்தையொட்டி வெளியிட்ட செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

உலக ஏதிலிகள் நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

பொல்லாத போர்களின் மோசமான விளைவே நாடற்ற மனிதர்கள்!

மனிதத்தைக் கொல்லும் போர்களால் வாழ்விழந்து ஏதிலிகளாய் புலம்பெயர்ந்தவர்களை அன்பால் அரவணைப்போம்!

நமது திராவிடமாடலில் "அகதிகள் முகாம்" என்பதை "மறுவாழ்வு முகாம்" எனப் பெயர் மாற்றி, அன்னைத் தமிழ் உறவுகளின் மாண்பைப் போற்றினோம்! வாழ்வாதாரத்தையும் வாழ்வுரிமையையும் பாதுகாக்கிறோம்!

போரை மாய்ப்போம்! மனிதம் காப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.